**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 304/2025, Kunnam P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலசுப்ரமணியன் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | சண்முகவேல் | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | குன்னம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 59 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.03.2026 | | | | | |

1 எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது குன்னம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 13.01.2025 ம் தேதி அன்று மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சரவணகுமார் என்பவரும், முதல் நிலை காவலர்களாக வீரப்பன் மற்றும் கலைசெல்வி ஆகியோர் பணியில் இருந்தார்கள். மேற்படி மூவரும் பணிமாறுதல் பெற்று தேர்தல் பணி காரணமாக வெளியூரில் பணி செய்து வருகிறார்கள் என்பதாலும், வழக்கின் தன்மை கருதி கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி நபர்கள் 13.01.2025 ம் தேதி நிலையத்தில் பணியில் இருந்தபோது மது விலக்கு தடுப்பு சம்பந்தமாக ரோந்து பணியினை வசிஷ்டபுரம் , விமலா திருமணம் மண்டபம் அருகே சென்று மறைவாக கண்காணிப்பு பணியில் இருந்தபோது சந்தேகப்படும் படியாக இருந்த எதிரி ஈஸ்வரன் என்பவர் மறைவான பகுதியில் உட்காந்து அவர் அருகில் இருந்த நபர்களிடம் பொருட்களை எடுத்து விற்பனை செய்வதை அறிந்து அவர் அருகே மேற்படி போலிசார் சென்றபோது அவரை சுற்றி இருந்த நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் ஆஜர் எதிரியை பிடித்து அரசின் உரிய அனுமதியின்றி கூடுதல் விலைக்கு அரசு மதுபானங்களை விற்பதாக சொன்னவரை காரணம் கூறி கைது செய்து அவரிடம் இருந்து 180ML அளவு கொண்ட பிளாக் பேரல் பிராந்தி பாட்டில்கள் எண்ணிக்கை 27 ஐ கைப்பற்றி, பின்னர் உரிய வழிமுறைகளை பின்பற்றி சம்பவ இடத்திலேயே அந்த வழக்கு சொத்துக்களை அழித்து கொட்டப்பட்டது. எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து குன்னம் காவல் நிலைய குற்ற எண். 17/2025, பிரிவு 4(1)(C) Tnp (Amendment Act) –2024 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு

DMC KUNNAM

செய்யப்டுகிறது. முதல் தகவல் அறிக்கை அ .த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாடும் இடம் என்று சொ`ன்னால் சரிதான். பொது நபர்களை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட போலிசார் சம்பவ தினத்தன்று பணியில் இருந்தது குறித்து பொது நாட்குறிப்பு ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் ஒரு பகுதியாக இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரசு மதுபான பாட்டில்கள் எந்த கடையில் இருந்து பெறப்பட்டது என்பது குறித்து விசாரித்து அந்த கடையில் பணி செய்யும் பணியாளரை ஒரு தரப்பு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபருக்கு கூடுதலாக பல மதுபான பாட்டில்கள் விலைக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். வெளி சந்ததையில் எளிதாக கிடைக்கும் பொருட்களை புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC CUM COURT, KUNNAM